**செய்தி வெளியீடு எண்:007** **நாள்:03.01.2017**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டைச் சேர்ந்த பொதுமக்களுக்கு ஆதார் எண் வழங்க ஏதுவாக தமிழகம் முழுவதும் **545** நிரந்தர சேர்க்கை மையங்களை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் கீழ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) நிர்வகித்து வருகின்றன. **1.10.2016** முதல் **31.12.2016** வரை **9,91,924** நபர்களுக்கு ஆதார் எண்ணிற்கென பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**12.9.2016** அன்று மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஆதார் சேர்க்கை வழிமுறைகளின்படி, ஆதார் எண் கிடைக்கப் பெற்று பதினைந்து வயது பூர்த்தியான நபர்கள் தங்களது உயிரியத் தகவல்களை (Biometric Information) பதினைந்து வயது பூர்த்தியடைந்த நாளிலிருந்து **2** ஆண்டுகளுக்குள் மீண்டும் கட்டாயமாக நிரந்தர சேர்க்கை மையங்களுக்கு நேரில் சென்று அளிக்க வேண்டும்.

எனவே மேற்கூறிய ஆதார் வழிமுறைகளின்படி பொதுமக்கள் செயல்பட ஏதுவாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் நிரந்தர சேர்க்கை மையங்களுக்கு **4.1.2017** முதல் நேரில் சென்று பதினைந்து வயது பூர்த்தியான நபர்கள் தங்களது உயிரியத் தகவல்களை அளித்துப் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **இந்த சேவை கட்டணமில்லா சேவையாகும்.**

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
இயக்குநர்,
மின்–ஆளுமை இயக்குநரகம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**